# பாடசாலை இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - அடம்பன் பிரதேசத்தின் சொர்ணபுரி கிராமத்தை மையப்படுத்திய ஆய்வு

# The reasons for dropout from school : A case study based on Sornapuri village in Adampan Region

M.S.Shamila Begum[1], S.M.M.Nafees[2]

[1,2] Department of Islamic studies, South Eastern University of Sri Lanka
Shamilasalih95@gmail.com, drsmmnafees@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த ஆயுதமாகும், இன்றைய காலத்தில் மனிதன் சமூகத்தில் மதிக்கப்படவும், உயர்ந்தவனாக எண்ணக்கூடியதும் கல்வி மாத்திரமேயாகும். ஒருவனிடத்தில் கல்வியும், ஒழுக்கமும் இணைந்து காணப்பட்டாலேயே அவனுடைய கல்விக்கு மதிப்புக்கிடைக்கும். இந்த வகையில் இவ் ஆய்வானது "**பாடசாலை இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - அடம்பன் பிரதேசத்தின் சொர்ணபுரி கிராமத்தை மையப்படுத்திய ஆய்வு** எனும் தலைப்பில் அமையப்பெற்றுள்ளது. இவ்வாய்வானது மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதற்கான காரணங்களைக் கண்டறிதல், மற்றும் மாணவர்களின் பாடசாலை இடைவிலகலைக் குறைப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் எனும் இரு நோக்கங்களைக் கொண்டு ஆய்வில் முதலாம் நிலைத்தரவுகளாக (2015-2019) காலப்பகுதியில் சொர்ணபுரி பாடசாலையிலிருந்து இடை விலகிய 09 மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், இடைவிலகிய மாணவர்களது பெற்றோர்கள், சமூகத்தில் முக்கியத்துவம் வகிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக சர்வதேச நிறுவனங்கள், அரச,அரச சார்பற்ற நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கைகள், பாடசாலை இடைவிலகல், கல்வி தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், பத்திரிகை ஆக்கங்கள், முன்னைய ஆய்வுகள், இணையத்தள ஆக்கங்கள், பிரதேச செயலகம், வலயக் கல்வி அலுவலகம், பாடசாலை, கிராம சேவகர்களின் அறிக்கைகளிலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு மீளாய்விற்குட்படுத்தப்பட்டு ஆய்விற்குரிய தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியமைக்கான காரணங்கள் இரண்டு வகையில் கண்டறியப்பட்டது. மாணவர்களின் பெற்றோர் சார்பாக பெற்றோர் பிள்ளைகளை விட்டு வெளிநாடு செல்லல், பெற்றோர் கல்வியறிவில் பின்னடைவு, பெற்றோர் ஊக்கமின்மை, தாய் அல்லது தந்தையின் இறப்பு, தாய் தந்தை பிரிந்து வாழ்தல், குடும்ப வருமானம் குறைவு, இடப்பெயர்வு என்பன கண்டுகொள்ளப்பட்டது. மாணவர்கள் சார்பாக கல்வியில் விருப்பமின்மை, சகபாடிகளின் சேர்க்கை, இளவயதில் குடும்பத்திறகாக உழைக்க வேண்டிய நிலை என்பன இனங்காணப்பட்டு இவ்வாறு இனங்காணப்பட்ட இடைவிலகல் காரணங்களுக்கு இடைவிலகலைக் குறைப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.


ISBN 978-624-5736-14-0

**திறவுச் சொற்கள்:** பாடசாலை, இடைவிலகல், காரணங்கள், அடம்பன் பிரதேசம், சொர்ணபுரி கிராமம்

**ஆய்வின் அறிமுகம்**

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமாயின் அவனுக்கு அறிவு அவசியமாகும். ‘‘கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் தலையாய கடமையாகும்.’’ இதனை இறைவன் 1400 வருடங்களின் முன் இறக்கப்பட்ட இறைவேதத்தில் இக்ர.்.. ஓதுவீராக, வாசிப்பீராக என கல்வியின் முக்கியத்துவத்தையும், கல்வியில் ஆர்வம் காட்டுவதையும் தெளிவுபடுத்தியுள்ளான்.

கல்வி கற்பதற்கான உரிமையையும், அனுமதியும் உலகலாவிய ரீதியில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுரிமை இலங்கை அரசியலமைப்பிலும் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு இலவசக்கல்வி, இலவச சீருடை, இலவச உணவு என இவ்வுரிமைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் உரிமையை இந்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்பட்டுள்ளது. கல்வியைப் பெற்றுக்கொள்வது மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும். இவ் உரிமையை ஒவ்வொருவரும் பல விதமான முறைகளில் பெற்றுக் கொள்ள முடியும். ஒருவர் பெறுகின்ற கல்வி அவரது ஆளுமைக்கும், ஆற்றலுக்கும், திறனுக்கும் அடித்தளமாக அமையப்பெற்றுள்ளது. (பொள்ளாச்சி நசன், 2007)

இன்றைய கல்வியில் நவீன யுகத்தின் தொழினுட்பம் மேல் நோக்கி வளர்சியடைந்தாலும், அடிமட்ட குடும்ப சிறுவர் தொகுதியினர் பாடசாலையிலிருந்து இடைவிலகி இதர செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். ‘‘யுனிசெப்பின் ஆண்டறிக்கையில் தென்னாசியாவிலும், உபசகாராவிலும் முன் பள்ளிக்குச் செல்லும் 50 மில்லியனுக்கு மேற்பட்ட மாணவர்களில் 10 கோடிச் சிறுவர் சிறுமிகள் பாடசாலைக்கு செல்லாது தெருவோரச் சிறுவர்களாக உலகில் காணப்படுகின்றனர். (keeththaviny, 2009)

மாணவர்களின் கல்வியில் ஆரம்பம் முதல் செல்வாக்குச் செலுத்துகின்ற மிக முக்கியமான அலகு குடும்பமாகும். குடும்பம் சிறப்பாக அமைந்தால் மாத்திரமே பிள்ளையின் கல்வியும் சிறப்பாக அமையும். நவீன கல்வி யுகத்தில் கல்வி கற்று வரும் மாணவர்கள் மத்தியில் மாணவர்களின் இடைவிலகல் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இடைவிலகல் என்பது பொதுக்கல்வியைப் பூர்த்தி செய்யாது இடையில் பாடசாலையை விட்டு விலகுவதாகும். அதாவது பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் 6-14 வயதுகளில் கட்டாயக்கல்வியைத் தொடராமல் இடைவிலகுகின்றனர். (கஸ்பியா, 2017)

நாட்டிலுள்ள சனத்தொகையில் 5வயது தொடக்கம் 17வயதிற்குட்பட்டவர்கள் 4.65% உள்ளனர். இவர்களில் 4118741 பேர் பாடசாலை செல்லும் அதே வேளை 452661பேர் பாடசாலை செல்லாதுள்ளனர். இதில் 70% மான மாணவர்கள் கிராமப்புற மற்றும் சேரிப்புற பிரதேசங்களில் வசித்து வருகின்றனர். தொழில் அமைச்சின் பணிப்புரையின் கீழ் குடிசன மதிப்பீட்டுத்திணைக்களம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உள்ளிட்ட சில நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட கணிப்பீட்டின்படி 5வயது தொடக்கம்

17 வயதிட்குட்பட்ட மாணவர்கள் 452661 பேர் பாடசாலைக்கு செல்லாது உள்ளதாகவும் இதில் 51249 பேர் ஒரு போதும் பாடசாலைக்குச் செல்லாதவர்கள் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (கஸ்பியா, 2017)

கல்வி அமைச்சில் பாடசாலை கணக்கெடுப்பு அறிக்கை - 2017 இற்கு அமைவாக 2017 ஆம் ஆண்டின் இலங்கையின் அரச பாடசாலைகள் 10,194 உம் அரச அல்லாத பாடசாலைகள் 859 உம் சர்வதேசப் பாடசாலைகள் 265 உம் தனியார் பாடசாலைகள் 80 உம், விசேட பாடசாலைகள் 26 உம், பிரிவென 753 உம் உள்ளன. அரச பாடசாலைகளில் மாகாணப் பாடசாலைகள் 9,841 ஆகவும் தேசிய பாடசாலைகள் 353 7 ஆகவும் உள்ளன. மேலும், இதில் 200 இற்குப் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 5,161 ஆகும். 5-14 வயதுக்குட்பட்ட மாணவர்களின் அனுமதி வீதம் 96.28 சதவீதமாக உள்ளதோடு தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலும் தொடர்ச்சியாக இருக்கும் வீதம் 88.75 சதவீதம் ஆகும். அவ்வாறே, 2017 ஆம் ஆண்டு வரையிலும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 93 ஆகும். ( தேசிய கணக்காய்வு அலுவலகம் செயலாற்றல் கணக்காய்வு பிரிவு, 2018)

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலானது மாணவர்களின் எதிர்காலத்தை வீணடிக்கச் செய்வதோடு, சமூகத்தின் சீர்கேடுகளுக்கு ஆரம்பப்படியாகவும், வீட்டு வன்முறைக்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனை போன்ற சமூக சீர்கேடுகளுக்கு வழியமைக்கின்றது. எனவே பாடசாலை இடைவிலகல் பற்றியும் அதனால் ஏற்படும் தாக்கங்கள், பாடசாலை இடைவிலகுவதால் பாதிக்கப்பட்டவர்களை உதாரணம் காட்டி சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அடம்பன் பிரதேசத்திற்குட்பட்ட சொர்ணபுரி கிராமத்துப்பாடசாலையில் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதற்கான தீர்வுகளை முன்வைத்து கிராம மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

608 சதுர கிலோமீட்டரை பரப்பளவாகக் கொண்ட அடம்பன் பிரதேசமானது 90,857 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. அடம்பன் பிரதேசமானது 36 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவற்றிற்கு 36 கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவில் ஒரு பிரிவாக சொர்ணபுரி கிராமம் காணப்படுகின்றது.

சொர்ணபுரி கிராமத்தில் கிட்டத்தட்ட 150 குடும்பங்கள் வாழ்கின்றனர். இங்கு மன்/ சொர்ணபுரி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அமையப் பெற்றுள்ளது. இப்பாடசாலை கிட்டத்தட்ட 100 மாணவர்களைக் கொண்டு தரம் 1தொடக்கம் 11வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்கி வருகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

மீள்குடியேற்றத்தின் பின் சொர்ணபுரி கிராமத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் இடைவிலகல் நிலை அதிகரித்து மாணவர்கள் இதர செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இந்நிலை

களையப்பட்டு மாணவர்களை கல்வியின் பால் முன்னேற்றுவதற்கு வழியமைப்பதற்காகவும், இப்பாடசாலைகளில் இடைவிலகல் தொடர்பாக எவ்வித வழிகாட்டல்களும், ஆய்வுகளும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை எனவே இவ் இடைவெளிகளைப் பூரணப்படுத்துவதற்காக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்**

- மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
- மாணவர்களின் பாடசாலை இடைவிலகலைக் குறைப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

**ஆய்வு முறைமை**

**முதலாம் நிலைத் தரவுகள்**

- **நேர்காணல்**

மீள்குடியேற்றத்தின் பின்னர் (2015-2019) காலப்பகுதியில் சொர்ணபுரி பாடசாலையிலிருந்து இடை விலகிய 09 மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், இடைவிலகிய மாணவர்களது பெற்றோர்கள் சமூகத்தில் முக்கியத்துவம் வகிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**இரண்டாம் நிலைத் தரவுகள்**

சர்வதேச நிறுவனங்கள், அரச,அரச சார்பற்ற நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கைகள், பாடசாலை இடைவிலகல், கல்வி தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், பத்திரிகை ஆக்கங்கள், முன்னைய ஆய்வுகள், இணையத்தள ஆககங்கள், பிரதேச செயலகம், வலயக் கல்வி அலுவலகம், பாடசாலை, கிராம சேவகர்களின் அறிக்கைகளிலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு மீளாய்விற்குட்படுத்தப்பட்டு ஆய்விற்குரிய தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

ஆய்விற்காகப் பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் விபரிப்புப் புள்ளிவிபரவியல் மூலமாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு மாணவர்களின் இடைவிலகல் காரணிகளைத் தெளிவுபடுத்தி இடைவிலகலைக் குறைப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

கீதாவினி, சிதம்பரநாதன் உதயகுமார்,(2014) ஆகியவர்களால் எழுதப்பட்ட **"கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல் ஓர் ஆய்வு**'' எனும் ஆய்வுக்கட்டுரையில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளைப்பயன்படுத்தி மாணவர்களின் இடைவிலகலைத்

தூண்டும் காரணிகளாக குடும்ப சூழ்நிலை, இடப்பெயர்வு, சகபாடிகளின் சேர்க்கை, கற்க வருமானமின்மை, தனிப்பட்ட நிலை, பெற்றோரது ஊக்கமின்மை, பெற்றோரின் இறப்பு, பிரிவு போன்ற நிலைமைகள் கண்டறியப்பட்டு இவ் இடைவிலகலைத் தூண்டும் காரணிகளைக் குறைப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

நாகேந்திரன் சுபதர்ஷினி,(2016)என்பவரால் எழுதப்பட்ட "**மாணவர்களின் இடைவிலகலும் அதனால் ஏற்படும் சமூகத்தாக்கங்களும்"** கொத்மலை கல்வி வலயத்தில் 460M,460G ஆகிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தமிழ் பாடசாலைகளின் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு என்ற ஆய்வுக்கட்டுரையில் மாணவர்களின் இடைவிலகலானது சமூகத்தில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்ஆய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டு கொத்மலை வலையத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கனிஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் இடைவிலகலானது அதிகரித்து காணப்படுவதாகவும், இதற்கு மாணவர் சார்ந்து கற்றல் சூழல் பிடிக்காமை, பாடசாலை தூரம்,கற்பதில் ஆர்வமின்மை, பெற்றோர் சார்ந்து வீட்டு வசதியின்மை,பிள்ளைகளைக் கவனிக்காமை,அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்காமை பாடசாலை மற்றும் சமூகம் சார்ந்த காரணிகளாக சமூக வலைத்தளங்களின் வளர்ச்சி,நாகரீக மோகம், பாடசாலை சார்ந்து வளப்பற்றாக்குறை,ஆசிரியர்களின் தவறான சொற்பிரயோகம் போன்றன இனங்காணப்பட்டு இடைவிலகளைக் குறைப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

w.waseem Akram, SMM.Mazahir, SLM.Farsath,(2019) ஆகியவர்களால் எழுதப்பட்ட **(அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய களஆய்வு)** எனும் ஆய்வுக்கட்டுரையில் பாடசாலை இடைவிலகல் காணப்படுகின்றதா? இடைவிலகளுக்கான காரணங்களைக் கண்டறிதல் எனும் இரண்டு நோக்கங்களைக் கண்டறிவதற்காக முதலாம் நிலைத்தரவுகளாக நேரடியாக உரிய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அதிபர்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டும், இரண்டாம் நிலைத்தரவுகளாக பாடசாலை ஆவணங்கள், பிரதேச செயலக ஆவணங்கள், ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்டு தகவல்கள் பெறப்பட்டு இறுதியில் ஆய்வுப் பிரதேசத்தில் இடைவிலகல் தெளிவாகக் காணப்படுவதாகவும், தரம் 6-11 வரை வளர்ச்சியடைந்து காணப்படுவதாகவும், இடைவிலகல் காரணிகளாக வறுமை, தொழில், இளவயதுத் திருமணம், பெற்றோரின் கவனக்குறைவு, போக்குவரத்துக்கடினம், பாதுகாப்பின்மை, மாணவர்கள் கல்வியில் ஆர்வமின்மை என்பனவும் கண்டறியப்பட்டு இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விதந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

Uthayakumar,S.S, (2011) "**மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பப் பொருளாதார சூழல்கள் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை சிறப்பாகக் கொண்ட ஆய்வு"** என்ற ஆய்வில் மாணவர்

இடைவிலகல் நிலைக்கும் பெற்றோரின் வருமான மட்டத்திற்கும் இடையே தொடர்பு காணப்படுவதாகவும், மாணவர் இடைவிலகலில் தந்தையின் கல்வி மட்டத்திற்கும் இடையே நெருக்கமான எதிர்க்கனிய தொடர்பு காணப்படுகின்றது, தாயின் கல்வி மட்டத்திற்கும் மாணவரின் இடைவிலகலிற்கும் எதிர்கனிய தொடர்பு காணப்படுவதாகவும் இணங்காணப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து இடைவிலகளைக் குறைப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

இடைவிலகல் என்பது பாடசாலை அனுமதியைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்யாமல் இடையிலேயே பாடசாலையை விட்டு விலகல் “ இடைவிலகல்” எனப்படுகின்றது. ஒரு பிள்ளை கல்வியை பெறாதிருப்பது நாட்டின் வளத்தை வீண்விரயம் செயலாக அமைகின்றது. இடைவிலகலினால் அரசு செலவிடும் பெறுமதிக்கு சரியான விளைவு கிடைக்காமல் போகின்றது.

அரசு மாணவர்களின் இலவச கல்விக்காக வருடாந்தம் இலங்கையின் அரச வருமானத்தில் 10 சதவீதத்திற்கும் அதிகமான தொகையை ஒதுக்குகின்றது. கடந்த 4வருடங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள் தொடர்பான விபரங்கள்

| | 2015 ரூபா மில்லியன் | 2016 ரூபா மில்லியன் | 2017 ரூபா மில்லியன் | 2018 ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|
| மீண்டெழும் | 157,956 | 168,591 | 173,378 | 175,579 |
| மூலதனம் | 21,175 | 24,776 | 27,539 | 36,362 |
| அரச வருமானம் | 1,379,245 | 1,698,755 | 1,845,017 | 1,935,095 |
| சதவீதம் | 12.8 | 11.4 | 10.9 | 10.9 |

**(தேசிய கணக்காய்வு அலுவலகம் செயலாற்றல் கணக்காய்வு பிரிவு)**

ஆய்வுப் பிரதேசமான அடம்பன் பிரதேசத்தின் சொர்ணபுரி கிராமப் பாடசாலையான மன்/ சொர்ணபுரி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 1-11 வரையான வகுப்புக்கள் காணப்படுகின்றன. இப்பாடசாலையில் கிட்டத்தட்ட 100 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் ஒவ்வொரு வகுப்புக்களிலிருந்தும் மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காது இடைநடுவே இடைவிலகியவர்களாகக் காணப்படுகின்றனர்.

**அட்டவணை 1: மன்/ சொர்ணபுரி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவர்களின் பதிவு**


| தரம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|
| 01 | 10 | 12 | 10 | 08 | 13 |
| 02 | 09 | 10 | 15 | 09 | 08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | 04 | 09 | 10 | 15 | 09 |
| 04 | 10 | 04 | 09 | 10 | 12 |
| 05 | 05 | 10 | 04 | 09 | 09 |
| 06 | 03 | 05 | 09 | 04 | 08 |
| 07 | 07 | 03 | 04 | 09 | 03 |
| 08 | | 07 | 02 | 04 | 09 |
| 09 | | | 07 | 02 | 03 |
| 10 | | | | 06 | 02 |
| 11 | | | | | 05 |
| மொத்தம் | 48 | 60 | 70 | 76 | 81 |

**மூலம்: மன்/ சொர்ணபுரி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை வரவு இடாப்பு (2015-2019)**

ஆட்டவணை(1) பாடசாலையிலிருந்து மாணவர்களின் இடைவிலகலை எடுத்துக் காட்டுகின்றது. மீள்குடியேற்றத்தின் பின் (2019) இப்பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஆய்விற்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியான 2015-2019 காலப்பகுதியில் 2015ம் ஆண்டு முதலாம் தரத்தில் 10 பேர் அனுமதிபெற்று அவர்கள் 2019ஆம் ஆண்டு 09 பேராகவும், 2016 ஆம் ஆண்டு 12 மாணவர்கள் முதலாம் தரத்திற்கு அனுமதி பெற்று அவர்கள் 2019 ஆம் ஆண்டில் அதே 12 பேருடனும், 2017ஆம் ஆண்டில் முதலாம் தரத்தில் 10 பேர் அனுமதி பெற்று 2019 ஆம் ஆண்டு 09 மாணவர்களாகவும், 2018 ஆம் ஆண்டு 08 மாணவர்கள் முதலாம் தரத்திற்கு அனுமதி பெற்று 2019 ஆம் ஆண்டில் அதே 08 பேருடன் இரண்டாம் தரத்தில் கல்வி கற்கின்றனர். 2019 ஆம் ஆண்டில் 13 மாணவர்கள் முதலாம் தரத்தில் இணைந்து கல்வி கற்று வருகின்றனர்.இந்த அட்டவணையைப் பார்க்கும் போது மாணவர்களின் இடைவிலகல் இடம்பெற்றிருப்பதை காணமுடிகிறது. அத்தோடு தரம் 5இன் பின்னரே மாணவர்கள் இடைவிலகுகின்றனர் என்பது இவ் அட்டவணை மூலம் தெளிவாகுகின்றது. இவர்களின் இடைவிலகலை வரைபடம் (1) தெளிவுபடுத்துகின்றது.


| வருடம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2015 | 10 |
| 2016 | 10 |
| 2017 | 10 |
| 2018 | 10 |
| 2019 | 09 |




**வரைபடம் 1**

இவ் வரைபடம் 2015ஆம் ஆண்டு முதலாம் தரத்தில் 10 மாணவர்கள் அனுமதி பெற்று அவர்கள் இரண்டாம், மூன்றாம்,நான்காம் தரத்தில் தொடர்ச்சியாக 10 மாணவர்களும் 4வருடமும் பாடசாலை சென்று 5ஆம் தரத்தில் அதாவது 2015ஆம் ஆண்டு பாடசாலையை விட்டு 1மாணவர் இடைவிலகியுள்ளார்.

| வருடம் | தரம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015 | 07 | 07 |
| 2016 | 08 | 07 |
| 2017 | 09 | 07 |
| 2018 | 10 | 06 |
| 2019 | 11 | 05 |




**வரைபடம் 2**



ISBN 978-624-5736-14-0

வரைபடம் 2 2015-2019 காலப்பகுதியில் தரம் 7தொடக்கம் 11வரை கற்ற மாணவர்களையும் அவர்களில் இடைவிலகியவர்களைத் தெளிவுபடுத்துகின்றது.இவர்களில் 7பேர் 2015ஆம் ஆண்டு 7ஆம் தரத்தில் கல்வி கற்று 8ஆம்,9ஆம்தரங்களில் அதே 7பேரும் வகுப்பில் கற்று 2018ஆம் ஆண்டு ஒருவர் இடைவிலகி 2019ஆம்ஆண்டு இன்னொருவர் இடைவிலகி 6பேரில 5மாணவர்களாக கல்விகற்றுள்ளனர்.

2015-2019 காலப்பகுதியில் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களாக 09 மாணவர்கள் காணப்படுகின்றனர். இவ் இடைவிலகிய மாணவர்களையும், அவர்களது பெற்றோர்கள், அதிபர்,சமூகத்தில் முக்கியத்துவம் வகிக்கும் உத்தியோகத்தர்கள் போன்றவர்களை நேர்காணலின் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு அவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகிதற்கான காரணங்களை நோக்குவோம்.

இவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியதற்கான காரணங்கள் இரண்டு வகையில் இணங்காணப்பட்டது. மாணவர்களின் பெற்றோர் சார்பாக பெற்றோர் பிள்ளைகளை விட்டு வெளிநாடு செல்லல், பெற்றோர் கல்வியறிவில் பின்னடைவு, பெற்றோர் ஊக்கமின்மை, தாய் அல்லது தந்தையின் இறப்பு,தாய் தந்தை பிரிந்து வாழ்தல், குடும்ப வருமானம் குறைவு, இடப்பெயர்வு என்பன கண்டுகொள்ளப்பட்டது.

மாணவர்கள சார்பாக கல்வியில் விருப்பமின்மை, சகபாடிகளின் சேர்க்கை, இளவயதில் குடும்பத்திற்காக உழைக்க வேண்டிய நிலை என்பன இணங்காணப்பட்டன. இவற்றை வரைபடம் மூலம் நோக்கும் போது





**(வரைபடம் 3)**


ISBN 978-624-5736-14-0

வரைபடம் 3 ஆனது பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்களின் காரணங்களாக இனங்காணப்பட்டவையில் பெற்றோர்கள் கல்வியில் பின்னடைந்து இருப்பதனால் அவர்களின் பிள்ளைகளின் கல்வியின் முன்னேற்றத்திலும் பெற்றோர்கள் கவனம் செலுத்தாது காணப்படுகின்றனர் இடைவிலகிய 9 மாணவர்களின் பெற்றோர்களும் கல்வியில் பின்னடைந்து காணப்படுகின்றனர். அதே போன்று இடைவிலகிய மாணவர்கள் அனைவரினதும் பெற்றோர்களின் குடும்ப வருமானம் குறைவானதாகக் காணப்படுவதனால் பிள்ளைகளின் பாடசாலைக் கல்விக்கும், மாலை நேர வகுப்பிற்கும் செலவிடுவதற்கு அவர்களிடம் போதிய பண வசதி இல்லாததினால் தங்களது பிள்ளைகளை பாடசாலையிலிருந்து இடைவிலக வழிவகுத்துள்ளனர்.

9மாணவர்களில் 6மாணவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளை சொந்தங்களிடம் பொறுப்புசாட்டி விட்டு வெளிநாடு செல்வதினால் பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர். 9மாணவர்களில் 5மாணவர்களின் பெற்றோர்கள் பிரிந்து வாழ்வதினால் பிள்ளைகள் கவனிப்பாரற்று பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர்.

9மாணவர்களில் 3மாணவர்களின் தாய் அல்லது தந்தை இறந்ததினால் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர். 8மாணவர்களின் பெற்றோர்களின் தீய செயல்களினால் மது அருந்தி விட்டு வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கு அடித்தல், உணவு கொடுக்காமை, தாய்க்கு அடித்தல்,இரவில் தூங்க விடாமை என்ற காரணங்களினால் மூன்று மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர்.




**(வரைபடம் 4)**

வரைபடம் 4இல் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை நேர்கண்டதன் பின்னர் அவர்களில் 31வீதமான மாணவர்கள் தமக்கு கல்வியில் விருப்பமில்லை எனவும்,38வீதமான மாணவர்கள் தாம் தங்களது குடும்பத்திற்காக இளவயதிலேயே உழைகக் வேண்டிய நிலை காணப்படுவதாகவும்,31வீதமான மாணவர்களின் நண்பர்களின் உறவுகளினாலும், அவர்களைப்

பார்த்து இவர்களும் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர் என்பது கண்டுகொள்ளப்பட்டது.

**மாணவர்களின் பாடசாலை இடைவிலகளைக் குறைப்பதற்கான ஆலோசனைகளை மற்றும் பரிந்துரைகள்**

- பெற்றோர்களிடத்திலும்,மாணவர்களிடத்திலும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தல்.
- பாடசாலையில் மாதத்திற்கு ஒரு முறை பெற்றோர் கூட்டம் நடாத்துதல்.
- கல்வியில் பின்னடைவுள்ள மாணவர்களுக்கு இலவச வகுப்புக்கள் நடாத்துதல்.
- வருமானம் குறைவான குடும்பத்திற்கு மாணவர்களின் கல்விக்காக பிரதேசத்து பைத்துல் மால், ஸகாத் அமைப்புக்கள் உதவி பெறுதல்.
- பெற்றோர்கள், மாணவர்களுக்கு நல்ல விடயங்களில் ஈடுபடுவது தொடர்பான பயான்கள், ஜும்மா பிரசங்க உரைகளை நிகழ்த்தல்.
- மாணவர்களுக்கு பாடசாலையுடன் மிக நெருங்கிய தொடர்பை உண்டு பண்ணும் வகையில் ஆசிரியர்கள் செயற்படல்.
- ஆசிரியர்கள் சகல மாணவர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் கற்றுக் கொடுத்தல்.
- மாணவர்கள் நாடிச் செல்லும் சினிமா, முகநூல், தேவையற்ற பிரச்சினைகள் என்பவற்றிலிருந்து நீக்கும் முகமாக கிராமத்தில் நூலகம், விளையாட்டு மைதானம் என்பவற்றை அமைக்க கிராம மக்கள் முன்வரல்.
- பிரதேச மக்கள் பாடசாலையை முன்னேற்றுவதற்கு உதவிபுரிதல்.
- பாடசாலை இடைவிலகலைத் தடுக்கும் வகையில் சில நடவடிக்கைகளை ஊர் மக்கள் ஏற்பாடு செய்து கொடுத்தல்.

**முடிவுரை**

அடம்பன் பிரதேசத்து சொர்ணபுரி கிராமத்து மன்/ சொர்ணபுரி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் வரையான காலப்பகுதியில் 9 மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர். இடைவிலகிய மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், ஆசிரிய, அதிபரை நேர்கண்டதிலிருந்து அவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியதற்கான முக்கிய காரணங்களாக பெற்றோரகள், மாணவர்கள் சார்பான காரணங்கள் இனங்காணப்பட்டு இனங்காணப்பட்ட காரணிகளை குறைப்பதற்கு இறுதியில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**உசாத்துணைகள்**

களதூர் பாரூக்.வி (2019),"கல்வியின் அவசியம்" Retrieved from: www.maalaimalar.com (accessed): 2021.05.28
பொள்ளாச்சி நசன், (2018.10.15), "கல்வி என்றால் என்ன?", Retrieved from: http://www.thamizham.net (accessed): 2021.05.28

keethaviny Gnanasingam, and sithamparanathan uthayakumar,(2014), "கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல் ஓர் ஆய்வு" Retrieved from: www.seu.ac.lk (accessed): 2021.05.24

கஸ்பியா வீவி ஏ.எம்.(2017.09.08), "பாடசாலை இடைவிலகல் காரணங்கள் கண்டறியப்பட வேண்டும்" Retrieved from: www.thinakaran.lk (accessed): 2021.05.28

மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ள அரச பாடசாலைகளின் செயலாற்றல், (தேசிய கணக்காய்வு அலுவலகம் செயலாற்றல் கணக்காய்வு பிரிவு),(2018)

நாகேந்திரன் சுபதர்ஷினி,(2016), "மாணவர்களின் இடைவிலகலும் அதனால் ஏற்படும் சமூகத்தாக்கங்களும்" (கொத்மலை கல்வி வலயத்தில் 460M,460G ஆகிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தமிழ் பாடசாலைகளின் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) Retrieved from: www.digital.lib.esn.ac.lk> (accessed): 2021.05.23

international workshop on education and poverty kampala,(2001), Retrieved from: www.unesco.org/education/poverty/news. (accessed): 2021.05.28

Waseem Akram w, Mazahir M.M.M,(2019) , "அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய களஆய்வு", Retrieved from: http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3404 (accessed): 2021.05.28

மீள்பார்வை,(2017), "பாடசாலை இடைவிலகல் மனித அபிவிருத்திக்குப் பெருந்தடை, Retrieved from: meelparvai.net (accessed): 2021.05.25

கிருசாயிதன்,(2017), "மாணவர்களின் இடைவிலகளுக்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும்" Retrieved from: www.battinews.com>blog (accessed): 2021.05.25